**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No.**15/2019

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ஆம் நாள் **ம.சா.1** சாட்சி **திருமதி.நிவேதா** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திருமதி.நிவேதா** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**ம.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் மனுதாரரின் பாதுகாவலர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

மைனர் மனுதாரரின் ஆதார் அட்டை சான்று நகல் **ம.சா.ஆ.**1 ஆகவும், பாதுகாவலரின் ஆதார் அட்டை சான்று நகல் **ம.சா.ஆ.**2 ஆகவும், பாதுகாவலரின் பான்

கார்டு சான்று நகல் **ம.சா.ஆ.3** ஆகவும், பாதுகாவலரின் வங்கிக்கணகக்கு புத்தகம் **ம.சா.ஆ.4** ஆகவும், 12.11.2018 தேதியிட்ட Copy of the representation of the father of the minor petitioner to the police officials அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆகவும், அஞ்சல் ஒப்புகை அட்டை இரசீதுடன் அசல் **ம.சா.ஆ.6** ஆகவும், 02.04.2018 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி நகல் **ம.சா.ஆ.7** ஆகவும், 02.04.2018 தேதியிட்ட மருந்து பில்கள் நகல் **ம.சா.ஆ.8** ஆகவும், குற்றப்பத்திரிக்கை சான்று நகல் **ம.சா.ஆ.9** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்:08.11.2024